**தம்புள்ள மாநகர சபை**

**மாத்தளை மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

-------------------------------

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூன் 17 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஒக்தோபர் 25 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

---------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தம்புள்ள மாநகர சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------

காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 167,059,672 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் அந்தக் கணக்குகளில் கட்டிடங்களுக்குரிய காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-------------------------------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ஊழியர் கடன் மீதிக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 8,000 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேழவயான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் 09 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 229,312,564 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,725,364 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,969,900 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 9,244,536 வீழ்ச்சியைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் படிகளான ரூபா 33,406,405 தொகை செலுத்தப்பட்டிருந்த போதும் சம்பள மீளளிப்பாக ரூபா 31,965,210 தொகை மாத்திரமே கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் சபையின் வருமானத்தில் ரூபா 1,441,195 தொகை சபை ஊழியர்களின் சம்பளத்தைச் செலுத்துவதற்கு செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் ஆதனவரி வருமானம் ரூபா 768,621 இனாலும், கடை வாடகை வருமானம் ரூபா 6,481,837 இனாலும், வியாபார அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 606,510 இனாலும், சேவைக்கட்டண வருமானம் ரூபா 2,957,224 இனாலும் அதிகரித்திருந்த போதிலும் அதற்கு எதிராக வழங்கல் மற்றும் உபகரணச் செலவினம் ரூபா 1,988,399 இனாலும் சம்பளம் மற்றும் வேதனங்கள் ரூபா 7,994,623 இனாலும் பெறுமானத்தேய்வு மற்றும் இழப்பீடுகள் ரூபா 2,516,606 இனாலும் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் பராமரிப்புச்

செலவினம் ரூபா 1,839,629 இனாலும் அதிகரித்திருந்தமை மீளாய்வாண்டின் நிதி விளைவின் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(இ) மொத்த வருமானத்திற்கும் மொத்த செலவினத்திற்கும் இடையிலான விகிதாசாரம்**

ஆண்டின் மொத்த வருமானத்தில் 98 சதவீதமான அளவு மொத்த செலவினம் காணப்பட்டமையால் சபையின் வருமானத்துடன் ஒப்பிடும் போது செலவினம் மிகவும் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது. முன்னைய ஆண்டின் நிளமையுடன் ஒப்பிடு செய்த போது இது திருப்திகரமான நிலையில் இல்லாதிருந்தமையை காண்பித்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமான சேகரித்தலில் செயலாற்றல்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாநகர சபையின் வருமான சேகரித்தலின் செயல்முன்னேற்றம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான மூலம் | 2014.01.01 இல் நிலுவை | 2014 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் | கிடைக்க வேண்டிய மொத்தத் தொகை | ஆண்டில் பற்றுச் சீட்டிடல்களின் பெறுவனவு | நிலுவை மீதியில் பெறுவனவு | மொத்தப் பெறுவனவு | 2014.12.31 இல் நிலுவை | நிலுவை மீதியின் பெறுவனவு சதவீதமாக | 2014 இன் பட்டியலிடல்களின் சேகரிப்பு சதவீதமாக |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) | 3=(1+2) | (4) | (5) | 6=(4+5) | (3-6) | % | % |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | | |
| வீதவரியும் வரியும் | 4,079,369 | 4,592,571 | 8,671,940 | 2,400,482 | 1,063,775 | 3,464,257 | 5,207,683 | 26 | 52 |
| வாடகை | 39,472,923 | 11,408,646 | 50,881,569 | 6,965,059 | 2,563,338 | 9,528,397 | 41,353,172 | 6.4 | 61 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,088,372 | 6,341,994 | 7,430,366 | 5,266,488 | 730,772 | 5,997,260 | 1,433,106 | 67 | 83 |
| சேவைகளுக்கான கட்டணம் | 55,500 | 7,953,050 | 8,008,550 | 7,885,550 | 55,500 | 7,941,050 | 67,500 | 100 | 99 |
| பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும் | 1,274,165 | 1,559,935 | 2,834,100 | 28,105 | 1,050,000 | 1,078,105 | 1,755,995 | 82 | 1.8 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய ஆதனவரி வருமானத்தில் 26 சதவீதமே அறவிடப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,207,683 தொகை அறவிடவேண்டியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கிடைக்க வேண்டிய வாடகை வருமானத்தில் ஆண்டின்போது 19 சதவீதத்தை விட குறைவான சதவீதமே அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேலும் ரூபா 41,353,172 தொகை அறவிடவேண்டியிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 5 பிரதான வருமானத் தலைப்புக்களின் நிலுவை வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 49,817,456 ஆன உயர் பெறுமதியைக் கொண்டிருந்தது. அதன் பிரகாரம் வருமானத்தை சேகரிப்பது தொடர்பில் சபை விஷேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

### 2.3.2 ஏனைய வருமானம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது சினிமா திரைஅரங்குகளில் காட்சிப்படுத்தப்பட்ட காட்சிகளிலிருந்து நிலுவை களியாட்ட வரியாக ரூபா 118,674 தொகை அறவிட வேண்டி இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது வாராந்த சந்தை வாடகைக்கு வழங்கியதால் அறவிட வேண்டிய ரூபா 303,418 வாடகைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது சபைக்குச் சொந்தமான வாகனங்களுக்கு எரிபொருள் பெற்றுக் கொள்ளும் போது கட்டளையிடப்பட்ட ரூபா 65,185 தொகையான

539.58 லீற்றர் எரிபொருள் தொடர்பான விபரங்கள் ஓட்டக் குறிப்புகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நகர முதல்வரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்காக மாதாந்த எரிபொருள் எல்லை மாநகர சபையினால் அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் சனவரி முதல் நவம்பர் வரையான காலத்தில் 6365.34 லீற்றர் டீசல் அளவு சபையினால் விநியோகிக்கப்பட்டிருந்தது.

(இ) மத்திய மாகாண சபை மற்றும் ஏனைய நிறுவனங்களிலிருந்து கிடைக்கப் பெற்ற 08 வாகனங்களின் உரித்தை சபைக்கு கையேற்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சினிமா அரங்குகளை நிர்மாணிக்கும் போது ஒப்பந்தக்காரரினால் பாவனைக்கு எடுக்கப்பட்ட மின்சாரம் மற்றும் தண்ணீருக்காக அறவிட வேண்டிய ரூபா 84,905 கட்டணத்தை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---

மத்திய மாகாண சபையின் பிரதம செயலகத்தினால் வழங்கப்பட்ட இரண்டு ஜீப் வண்டிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டன.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

---

வேலைகள் தொடர்பாக 2015 ஏப்ரல் 28 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | ஒப்பந்தத்தின் பெயர் | ஒப்பந்தக்காரர் | நிதிஏற்பாடு | மதிப்பிடப்பட்ட தொகை | | அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் |
|---|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | | |
| (அ) | முன்பள்ளிப் பாடசாலைக் கட்டிட நிர்மாணம் - றத்மல்கஹஎல | ரத்மல்கஹஎல விவசாய அமைப்பு | கமநெகும | 400,000 | i | வேலை விடய இலக்க 03 இன் கீழ் தூண்களுக்காக 12cm முறுக்கு இரும்புக் கம்பி பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் ஒரு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | துாணுக்காக முறுக்கு இரும்புக் கம்பி போடப்பட்டிருக்கவில்லை. |
| | | | | | ii. | வேலை விடய இலக்கம் 08 இன் கீழ் 09 துாண்களும் 04 பக்கக் கட்டுக்களுக்கு 12cm முறுக்கு இருப்புக்கம்பி 205.50 kg இற்காக ரூபா 47,676 செலுத்தப்பட்டிருந்த போதும், 10 cm முறுக்கு கம்பியே பயன்படுத்தப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. |
| | | | | | iii | நிர்மாணத்திற்குரிய காணி மாநகர சபைக்கு கையேற்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | தித்தவல்கொல்ல சேவை நிலைய நிர்மாணம் | தித்தவெல்கொல்ல றணபிம விவசாய அமைப்பு | தொகுதி அமைப்பாளரின் விஷேட நிதிஏற்பாடு | 500,000 | | காணி சபையினால் கையேற்கப்பட்டிருக்க வில்லை |
| (இ) | தித்தவல்கொல்ல சிகிச்சை நிலையம் மற்றும் உடற்பயிற்சி நிலையம் | -மேற்படி- | ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை | 1,001,190 | i | கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட சீமெந்துக் கற்களின் நியமம் பரீட்சிக்கப்படாதிருந்ததுடன் அந்தக் கல் இலகுவாக உடைந்து போகக்கூடிய நிலையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. |
| | | | சபை நிதியம் | 1,000,000 | ii | வேலை விடய இலக்கம் 14 இன் பிரகாரம் பெயர்ப் பலகையொன்று அமைக்கப்பட்டிருக்க விலலை |

iii கூரைக்கு மரம் இட்டு புதிதாக எல்பெஸ்டஸ் சீட் பொருத்தப்பட வேண்டிய போதிலும், பரீட்சித்த போது பழைய இரும்பு மற்றும் பழைய எஸ்பெஸ்டஸ் சீட் இட்டு கூரை அமைக்கப்பட்டிருந்தது.

iv காணி மாநகர சபைக்கு கையேற்கப்பட்டிருக்க வில்லை.

**3.4 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

---

சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் சபையின் நான்கு உழவு இயந்திரங்கள் மற்றும் டிபர் வாகனமொன்றைப் பயன்படுத்தி திகம்பதஹ பிரதேசத்தில் அரசாங்கக் காணியில் நாள்தோறும் அகற்றப்பட்டிருந்ததுடன் இதன் மூலம் பல்வேறு சுற்றாடல் பிரச்சினைகள் எழுந்திருந்தமையையும் காணக்கூடியதாக இருந்தது. கழிவுகளை மீள்சுழற்சி வேலைத்திட்டத்திற்காக சபை கவனம் செலுத்தியிருந்த போதிலும் சரியாக அச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**4.1 கணக்காய்வுக் குழு**

---

2014 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய பிரதம அமைச்சுச் செயலாளரின் சீபீசீ/சீஎல்ஜீ/116 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின்போது கணக்காய்வுக்குழு உருவாக்கப்பட்டிருந்தும் கணக்காய்வுக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

I. மீளாய்வாண்டின் போது பாதீட்டின் மூலம் 05 செலவின விடயங்களுக்காக மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாட்டு எல்லையை விஞ்சி ரூபா 1,037,269 செலவிடப்பட்டிருந்தது.

II. பாதீட்டின் மூலம் 22 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 848,000 தொகையான நிதி ஏற்பாடுகளில் எந்தச் செலவினமும் செய்யப்படாது ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டும் சேமிக்கப்பட்டும் இருந்தன.

### 4.3 தீர்க்கப்படாத மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

----------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களில் ஒரு ஐயவினாவிற்கு பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஐயவினாக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பீடு செய்யக்கூடிய பெறுமதி ரூபா 1,162,000 ஆகும்.

### 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்
(உ) வாகனக் கட்டுப்பாடு